**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** தலைவர் அவர்களே, திருவிதாங்கூர், கொச்சி அரசாங்கம் மருத்துவச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களை, மத்திய இந்திய மருத்துவக் குழுவால் எற்படுத்தப்பட்டுள்ள பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்க ஆணை எண் 556 தெளிவாக சொல்லியிருந்தும், புதுக்கடையில் பணிபுரிகிற மருத்துவர், திருப்பதிசாரம் மற்றும் சில இடங்களில் பணிபுரிகிற மருத்துவர்கள் இதற்காக விண்ணப்பம் செய்து பல ஆண்டுகள் ஆகியும் சேர்த்துக் கொள்ளாமல், அவர்களுடைய கல்வித் தகுதியைப் பற்றி மேலும் மேலும் விளக்கம் கேட்டபடி இருப்பது எனக்குத் தெரியும். ஆகவே அரசு இது குறித்து மீண்டும் பரிசீலனை செய்து அத்தகைய இன்னல்கள் அவர்களுக்கு ஏற்படாத வண்ணம் செய்ய முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** கனம் உறுப்பினர் அவர்களிடம் இருக்கும் குறிப்பை அரசாங்கத்திடம் கொடுத்தால் நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

### *Doctors and Nurses*

*127 *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of doctors holding degrees and the number of nurses who have applied for jobs during the current year in Tamil Nad ?

(*b*) the number of months which had elapsed since they applied for jobs ; and

(*c*) the steps taken by the Government to provide them with jobs ?

### பட்டம் பெற்ற மருத்துவர்கள், நர்சுகள்

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நடப்பு 1967–68 ஆண்டில் தமிழகத்தில் (1) பட்டம் பெற்ற டாக்டர், (2) நர்சு முறையே எத்தனை பேர் வேலைக்கு மனுச் செய்துள்ளனர்?

(இ) இவர்கள் வேலை கேட்டு மனுச் செய்து எத்தனை மாதங்களாகின்றன ?

(உ) இவர்களுக்கு வேலை கொடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. கூடிய சீக்கிரம் அவைகள் மன்றத்தின் முன் வைக்கப்படும்.

**திரு. என். ஆர். தியாகராஜன் :** தலைவரவர்களே, ஆறு மாதங்களுக்கு முன்னால் கூட 200 டாக்டர்களும், 400 நர்சுகளும் வேலையில்லாமல் வேலைக்கு மனு செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா ? அப்படியென்றால் அவர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு கொடுக்கும் வகையில் புதிய ஆஸ்பத்திரிகள் திறக்க அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** தலைவரவர்களே, ஏற்கனவே குறிப்பிட்டது போல் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. கூடிய விரைவில் அது பற்றி கவனிக்கப்படும்.